MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **20.05.2022**(Urgent)

<table>
<tr><th>Resolution No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td></td><td>20.05.2022 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு<br>நடைபெற்ற அவசரக்கூட்டம்<br>முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்</td><td></td></tr>
<tr><td>27</td><td>மன்றப்பொருள் எண்.1<br>அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுநெறிமுறைகளின்படி, கீழ்கண்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி/காலிமனைவரியினை பொதுச்சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.21 நாள் 11.04.2022–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br><br><u>சொத்துவரி:</u> குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :
<table>
<tr><th>பரப்பளவு (ச.அடி)</th><th>உயர்வு செய்வதற்கானகாரணி</th></tr>
<tr><td><=600</td><td>1.25</td></tr>
<tr><td>601-1200</td><td>1.50</td></tr>
<tr><td>1201-1800</td><td>1.75</td></tr>
<tr><td>>1800</td><td>2.00</td></tr>
</table>
<br>குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :
<table>
<tr><th>வகைப்பாடு</th><th>உயர்வு செய்வதற்கானகாரணி</th></tr>
<tr><td>தொழிற்சாலைகள்</td><td>1.75</td></tr>
<tr><td>வணிக பயன்பாட்டு கட்டடங்கள்</td><td>2.00</td></tr>
<tr><td>சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள்</td><td>1.75</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>சொத்துவரி , காலிமனைவரி பொதுசீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | **குடியிருப்பு** | | | |
|---|---|---|---|---|---|
| | | **<=600** | **601-1200** | **1201-1800** | **>1800** |
| | | **1.25** | **1.50** | **1.75** | **2** |
| A | 0.90 | 1.13 | 1.35 | 1.58 | 1.80 |
| B | 0.70 | 0.88 | 1.05 | 1.23 | 1.40 |
| C | 0.50 | 0.63 | 0.75 | **0.88** | 1.00 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வணிகம் |
|---|---|---|
| | | **வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு(*2)** |
| A | 2.70 | **5.40** |
| B | 2.10 | **4.20** |
| C | 1.50 | **3.00** |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகள் |
|---|---|---|
| | | **வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75)** |
| A | 1.35 | **2.36** |
| B | 1.05 | **1.85** |
| C | 0.75 | **1.31** |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | காலியிடம் |
|---|---|---|
| | | **வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2)** |
| A | 0.20 | 0.40 |
| B | 0.30 | 0.60 |
| C | 0.40 | 0.80 |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட விவரங்களுக்கு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொதுச்சீராய்வு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இதனை பொதுமக்கள் அறியும் வகையில் மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக 13.04.2022 இந்துதமிழ் திசை நாளிதழ், தினபூமி ஆகிய நாளிதழ்கள் மற்றும் Trinity Mirror ஆங்கில நாளிதளில் செய்தி வெளியிட்டும், அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு **மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்வு செய்யப்படும் காரணிகளின் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு** ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ மேலூர் நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்பிடி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு 30 நாட்களுக்குள் பொதுமக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே 11.04.2022 தேதிய நகர்மன்ற கூட்ட தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ளவும், இதில் நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பினை உறுதி செய்தும், அதற்கான அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர்

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :-**<br><br>இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 21 நாள். 11.04.2022 இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மண்டல மதிப்பினை 01.04.2022 முதல் பொது சொத்துவரி/காலிமனைவரி சீராய்வு மேற்கொள்ள மன்றம் ஊர்ஜிதம் செய்து தீர்மானிக்கலாம். | |

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.